# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை | 08.11.2024 | கதிர் 411







## பிரமிட் திட்ட மோசடி நபர் கட்டுநாயக்காவில் கைது!

கொழும்பு, நவ.08

தடைசெய்யப்பட்ட பிரமிட் சீட்டு முறைமூலம் பெருமளவு பண மேசடியில் ஈடுபட்ட பின்னர் தலைமறைவாகி வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற ஒருவர் இன்று காலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் வரை பிரமிட் திட்டத்தின் ஊடாக பலரிடமிருந்து சுமார் 1800 மில்லியன் ஷரூபாய் பணத்தை மோசடி செய்து நாட்டை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இன்று காலை மலேசியாவில் இருந்து மீண்டும் நாட்டுக்கு வருகை தந்த போது, சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சந்தேகநபரை வரவேற்பதற்காக விமான நிலையத்தில் காத்திருந்த அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ஐ)

# பிராந்திய அரசியல்வாதிகள் எவருக்கும் மக்களைப் பற்றி பிரக்ஞையே இல்லை!

### - கற்றறிந்தோர் சார்பில் குற்றஞ்சாட்டுகிறார் கலாநிதி அறிவழகன் -

*யாழ்ப்பாணம், நவ. 08*

*யாழ்ப்பாணத்தை இதுவரை காலமும் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல்வாதிகள் அனைவரும் போர்க்குற்ற விசாரணையையும், இனப்பிரச்சினைத் தீர்வையும் வைத்தே 15 வருட காலமாகத் தங்களுடைய அரசியலைக் கொண்டு நடத்தி, தங்கள் குடும்பங்களின் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்துள்ளனர் என்றும், மக்களுக்கிருக்கிற பிரச்சினைகள் பற்றி எந்தவிதமான பிரக்ஞையும் இல்லாமல் எங்களுடைய அரசியல்வாதிகள் செயற்படுகிறார்கள் என்றும் கற்றறிந்தோர் சார்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.*




பல்வேறு ஆளுமைகளின் சார்பில் "தேசிய மக்கள் சக்தியை நாம் ஏன் ஆதரிக்கிறோம்" என்ற தொனிப்பொருளில் சட்டத்தரணி ஒருவரும், பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும், ஓய்வுபெற்ற பொறியியலாளர் ஒருவரும் இன்று ஊடக சந்திப்பொன்றை நடத்தினர். அந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே பல்கலைக்கழக கணிதவியல் விரிவுரையாளர் கலாநிதி செ. அறிவழகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நடந்த இந்த ஊடக சந்திப்பின் போது, சட்டத்தரணி புவீந்திரன் ரெக்னோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி செ. அறிவழகன், ஓய்வுபெற்ற பொறியியலாளர் எம். சூரியசேகரம் ஆகியோர் கலந்துகொண்டு 2➤

## தரம் ஒன்றில் பிள்ளையைச் சேர்க்க இலஞ்சம் வாங்கிய அதிபர் கைது!

கொழும்பு, நவ. 08

தரம் ஒன்று மாணவர் அனுமதிக்காக இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் ஆரம்ப பாடசாலை அதிபர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் பிள்ளையைச் சேர்ப்பதற்காக இராகம பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றின் பெண் அதிபர் ஒருவரே 2➤






# மாதிரி வாக்குச் சீட்டுகளுடன் கட்சித் தொண்டர்கள் கைது!

கல்முனை, நவ 08

சட்டவிரோதமாக அச்சிடப்பட்ட 32 ஆயிரம் மாதிரி வாக்குச்சீட்டுக்களைக் கட்சி ஒன்றின் அலுவலகத்துக்கு எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவற்றை எடுத்துச் சென்ற வாகனமும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசீம் வீதி பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கட்சி ஒன்றின் அலுவலகத்துக்குச சட்டவிரோத மாதிரி வாக்குச்சீட்டுக்கள் எடுத்து செல்லப்பட்ட நிலையிலேயே அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கும் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் கட்சி அலுவலகத்துக்கு அருகில் தேடுதல் மேற்கொண்ட போது, பொதி செய்யப்பட்ட சுமார் 32 ஆயிரம் வாக்குச்சீட்டுக்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் மாலை கைது செய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட மாதிரி வாக்ச்கு சீட்டில் ஒரு முஸ்லீம் தேசிய கட்சி சின்னத்துக்கும் இலக்கம் இரண்டுக்கும் புள்ளடி இடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 2➤

## தேர்தல் விதிமீறலுக்காக 11 வேட்பாளர்கள் கைது!

கொழும்பு, நவ. 08

தேர்தல் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறிய குற்றச்வாட்டுகளின் கீழ் இதுவரை 11 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

துண்டுப்பிரசுர விநியோகம், பதாகைகளைக் காட்சிப்படுத்துதல், விடுவிப்புக்காக பொலிஸ் நிலையங்களில் அமைதியற்ற முறையில் செயற்பட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேநேரம், தேர்தல் சடடங்களை மீறியமை தொடர்பில் 353 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)



மரநடுகை மாதத்தை முன்னிட்டு, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் "கார்த்திகைப் பூக்கள்" மர வளர்ப்புச் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கதீஜா மகாவித்தியாலயத்தில் நேற்று மரநடுகை மேற்கொள்ளப்பட்டது.

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சத்தியைத் தாங்கள் ஏன் ஆதரிக்கிறோம் என்பது குறித்து விளக்கமளித்தனர். இந்த ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட விரிவுரையாளர் கலாநிதி செ. அறிவழகன் மேலும் தெரிவிக்கையில், "சுதந்திரம் அடைந்த வேளையில் வளமான நாடாக இருந்த இலங்கை திவாலான நாடாக மாறியிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? கிட்டத்தட்ட 75 வருடங்களாக ஐந்து உயரடுக்குக் குடும்பங்களே மாறி மாறி ஆட்சி செய்து வந்துள்ளன. தாங்கள் ஆட்சிக்கு வருவதற்காக மாறி மாறி இனவாதத்தைக் கையிலெடுத்தார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்ற போது நாமெல்லாம் இலங்கையர்களாகவே சுதந்திரத்தைப் பெற்றோம். அந்த நேரத்தில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையில் பிரச்சினை இல்லை. நல்லிணக்கம் இருந்தது. ஒற்றுமை இருந்தது. இன்று நாம் இலங்கையர்கள் என்ற அடையாளத்தைத் தொலைத்து, தமிழர்களாகவும், சிங்களவர்களாகவும், முஸ்லீம்களாகவும் பிரிந்து நிற்கிறோம்.

75 வருடங்களின் பின் இனவாதத்தைக் கையிலெடுக்காத தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. ஸனாதிபதி அனுரகுமார திஸ ாநாயக்க ஒரு சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர் - உயரடுக்குக் குடும்பத்தைச் சாராதவர். இதனை ஒரு மாற்றமாக நாங்கள் பார்க்கிறோம்.

80 களின் ஆரம்பத்தில் எமது போராட்ட இயக்கங்கள் தெளிவாகக் குறிப்பிட்டன "எங்களது போராட்டம் சிங்கள பேரினவாதத்துக்கு எதிரானதே அன்றி சிங்கள மக்களுக்கு எதிரனதல்ல என்று. ஆனால் இன்று பிழைப்புவாத அரசியல் கட்சிகள் தமது சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்காக சிங்கள மக்கள் அனைவரையும் பேரினவாதிகளாகக் காட்ட முயற்சிக்கிறார்கள்.

இனக்கலவரத்தின் போது, சிங்களக் காடையர்களால் தமிழர்கள் தாக்கப்பட்ட போது பல சிங்களவர்கள் தமிழர்களைக் காப்பாற்றினார்கள். சிங்களவர்கள் அனைவரையும் பேரினவாதிகளாகக் காட்டி, தேசிய மக்கள் சக்தியைப் பேரினவாதக் கட்சியாகக் காட்டி தங்களுடைய அரசியலை முன்னெடுப்பதற்கு இவர்கள் முனைகிறார்கள்.

ஆனால், இலங்கையர்கள் என்ற அடையாளத்தைத் திரும்ப ஏற்படுத்த முயற்சிக்கும் ஒரு அரசியல் கட்சியாகவே தேசிய மக்கள் சக்தியை நாங்கள் பார்க்கிறோம்.

யுத்தம் முடிந்து 15 வருடங்களாகி விட்டது. இந்தக் காலப்பகுதியில் எங்களுடைய அரசியல்வாதிகள் எதிர்ப்பரசியலில் ஈடுபட்டு வந்ததனால் முறையான அபிவிருத்தி இடம்பெறவில்லை. எமது பிரதேச இளைஞர்களுக்கு அரச வேலைகளைப் பெற்றுக் கொள்வது இலகுவானதாக இல்லை. மக்களுக்குச் சேவையாற்றத்தயார் இல்லாத அரச அலுவலகங்களால் மக்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். சட்டம், ஒழுங்கைப் பேணாமல் லஞ்சம் பெறுவதிலேயே காவல் துறை குறியாக இருக்கிறது. மக்கள் நலன் சாராத அலட்சியப் போக்குடன் பல கிராமப்புற ஆதார வைத்தியசாலைகள் செயற்படுகின்றன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் - பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், நுண்கடன் நிறுவனங்களின் தொல்லைகள். இப்படியான பல பிரச்சினைகளால் படித்தவர்களும், இளையோரும் பிரதேசத்தை விட்டவெளியேறிக் கொண்டிருகக்கிறார்கள்.

இவ்வளவு பிரச்சினைகளும் எங்களுக்கிருக்க, இவற்றைப்பற்றி எந்தவிதமான பிரக்ஞையும் இல்லாமல் எங்களுடைய அரசியல்வாதிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வும், போர்க்குற்ற விசாரணையும் மட்டும் தான் எங்களுக்கு இருக்கின்ற பிரச்சினை என்கிறார்கள். இவை உண்மையில் பிரச்சினைகள் தான். ஆனால் அது மாத்திரம் தான் எங்கள் பிரச்சினை இல்லை.

போர்க்குற்ற விசாரணையையும், இனப்பிரச்சினைத் தீர்வையும் வைத்தே 15 வருட காலமாகத் தங்களுடைய அரசியலைக் கொண்டு நடத்தி, தங்கள் குடும்பங்களின் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்துள்ளனர். ஆனால் மக்கள் வாழ்வாதாரத்தை எதிர்கொள்ள முடியாமல் பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் 12 ஆக இருந்து 6 ஆகக் குறைந்தமைக்கு எமது பிராந்திய அரசியல்வாதிகளே காரணம். ஆனால் தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைச் சரியான முறையில் அணுகுகிறார்கள். தமிழ்மொழி உரிமை பேணப்படும் என உறுதியளித்துள்ளனர். திட்டமிட்ட இன விகிதாசாரத்துக்கெதிரான குடியிருப்புகள் நடக்காது என உறுதியளித்துள்ளது. அவர்கள் உறுதியளித்தபடி பூர்வீக நிலங்களையும், பாதைகளையும் கையளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அனைத்து இன மக்களும் தமது அடையாளங்களுடனும், தமக்கான தனியான கலாசாரத்துடனும், கௌரவமாக வாழ்வதற்குத் தேசிய மக்கள் சக்தி உறுதிப்படுத்துகிறது" என்றார்.. (ஐ)

## மாதிரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், மீட்கப்பட்ட சட்ட விரோதமான வாக்குச்சீட்டுக்கள் யாவும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்ப டைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-03)

## தரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

150,000 ரூபாவை இலஞ்சமாக பெற்ற சமயம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராகம, மத்துமகல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். முறைப்பாட்டாளரின் பிள்ளையை 2025ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் சேர்ப்பதற்கு இலஞ்சமாக இந்தப் பணத்தை சம்பந்தப்பட்ட அதிபர் கேட்டதாகத் தெரியவருகிறது.

நேற்று பிற்பகல் 4:00 மணியளவில் பாடசாலையின் அதிபர் அலுவலகத்தில் வைத்து இலஞ்சம் வாங்கிய சந்தர்ப்பத்தில் அதிபர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைது செய்யப்பட்ட அதிபர் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ)






# போலித் தகவலை பரப்பியவருக்கு எதிராக சிறீதரன் சட்ட நடவடிக்கை!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மதுபானசாலை அனுமதிக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கியுள்ளதாக, போலிக் கடிதம் ஒன்றுடன் முகநூலில் பிரசாரம் செய்த ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி காவல் நிலையத்தில் இன்றையதினம் குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது.

முறைப்பாடு செய்ததன் பின்னர் சிறீதரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "ஜனநாயக முறைப்படி உட்கட்சித் தேர்தலின் அடிப்படையில் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட என்னை, நீதிமன்ற வழக்கினால் இயங்க விடாது தடுத்தவர்களின் மற்றொரு முயற்சியாக, எனது கடிதத் தலைப்பையும், பதவி முத்திரையையும் முறைகேடாகப் பயன்படுத்தி தொழிநுட்ப உதவியோடு போலியான கடிதத்தை தயாரித்து முகநூலில் விசமப் பிரசாரத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

அத்கைய வதந்திகளை பரப்பும் நபரொருவர் மீது இன்றையதினம் கிளிநொச்சி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். தொடர்ச்சியான முறைமைகளுக்குட்பட்டு அந்த நபர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெளியிடப்பட்ட கடிதம் போலியானது என்பதை எண்பிக்க போதுமான ஆதாரங்கள் அந்தக் கடிதத்திலேயே உள்ளன. அறிவிலித்தனமாக செயற்பட்டுவரும் இவர்களை எமது மக்கள் எளிதில் இனங்கண்டு கொள்வார்கள்.

என்னை விசுவாசிக்கும் எனது மக்களுக்கு நான் மீளவும் ஒன்றை வலியுறுத்திக் கூறுகிறேன். இதுவரை காலமும் நான் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை பெறவோ, அத்தகைய அனுமதி ஒன்றுக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கவோ இல்லை.

அவ்வாறு நான் வழங்கியிருப்பதாக யாராவது கருதினால் ஜனாதிபதி செயலகத்திலோ, மதுவரி திணைக்களத்திலோ உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வெளிப்படுத்துங்கள். அதைவிடுத்து பிற்போக்குத்தனமான அற்ப அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உங்களை நீங்களே தரம்தாழ்த்திக் கொள்ளாதீர்கள்" என தெரிவித்தார்.





# தமிழுக்குப் பேர் அழகா? அறிவா?

கொஞ்சிப் பேசும் செல்லக் குழந்தை. யார் அழைத்தாலும் வாஞ்சையுடன் செல்கிறது. மழலை மொழிப் பேசும் பருவத்தில் தத்துவம் பேசுகிறது, இலக்கியம் இசைக்கிறது, அரசியலில் அமர்கிறது, கணினியில் தவழ்கிறது, செயற்கை நுண்ணறிவிற்கு செல்லப்பிள்ளையாக வளர்கிறது. அடடா அதன் திறன்களை சான்றோர்களும் சாமானியர்களும் வியந்து வியந்து மகிழ்கிறார்கள். இதயத்தோடு அணைத்து உச்சி முகர்ந்து கொஞ்சுகிறார்கள். அதன் கைகளுக்கு இடையில் விரல் வைத்து தோளுக்கு மேல் உயர்த்தி சிரித்து சிரித்து சுற்றுகிறார்கள். சுற்றும் வேகத்தில் தலை சுற்றலுக்கு ஆளாகிறார்கள். தலை சுற்றலுக்கு வியப்பு தரும் வேறொரு காரணம் இருக்கிறது. அது அந்தக் குழந்தையின் வயது. ஆம், அந்தக் குழந்தையின் வயது நாலாயிரத்திற்கும் மேலென்று அறிஞர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

மனிதர்கள் தாய் தலைமை சமுகத்தில் காடுகளில் பொருள் சேகரித்த காலத்திலேயே பிறந்துவிட்ட குழந்தை. தாய் தலைமையின் அரவணைப்பில் வளர்ந்துவிட்ட குழந்தை. அவர்களது அறிவிற்கும் உணர்விற்கும் உயிர் தந்த குழந்தை. மக்களின் கதைகளுக்கெல்லாம் அரசியான குழந்தை. இந்தக் குழந்தைதான் வேட்டை நாகரிகத்திலும் வீர மகளாய் அறிவு தந்தாள். கால்நடை மந்தை வளர்ப்பு நாகரிகத்திலும் மக்களை வாஞ்சையுடன் மேய்த்தாள். விவசாய நாகரிகத்திலும் கலை அறிவியலை விளைவித்தாள். வணிக நாகரிகத்திலும் அறம் பாட கற்றுத் தந்தாள். வரலாறெல்லாம் உழைக்கும் மக்களை வாஞ்சையுடன் அரவணைத்து விரல் பிடித்து வழியமைத்தாள்.

காடு சார்ந்த பொருள் சேகரிப்பு நாகரிகம் முதல் இன்றுவரை கதை சொல்லும் பாட்டிகளைப் பெற்றெடுத்தவள் இவள்தான். சிந்து முதல் சங்க இலக்கியம்வரை பண்பாட்டைப் பெற்றெடுத்தவள் இவள்தான். பாட்டுக்கு அவ்வை எனினும் அவ்வையைப் பெற்றெடுத்தவளே இவள்தான். கால்நடை மந்தை வளர்ப்பு நாகரிகத்தில் அறிவியல் இலக்கியம் பாடிய தொல்காப்பியரைப் பெற்றெடுத்தவள் இவள்தான். விவசாய நாகரிகத்தில் உலகப் பொதுமுறை தந்த திருவள்ளுவரைப் பெற்றெடுத்தவள் இவள்தான். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பாடி, பேரன்பை உலகமயமாக்கிய கணியனைப் பெற்றெடுத்தவள் இவள்தான். இப்படி பல்லாயிரம் ஆண்டுகள் பல தலைமுறைகளைப் பெற்றெடுத்துள்ள பெருமுது கிழவிதான் இவள். இன்றும் சிறு குழந்தையின் தோற்றத்தில் பேரழகாய் நம்முடன் விளையாடுகிறாள். நம் உணர்விற்கும் உயிருக்கும் இசையாகிறாள். இந்தக் குழந்தையின் பெயர்தான் தமிழ்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நணபர்களே. தமிழில் ஆழமாகவும் அகலமாகவும் அடர்த்தியாகவும் துல்லியமாகவும் சிந்திக்கும் திறனை இழக்காதவர்களாக நம்மால் வாழ முடிகின்றதா? குறிப்பானவற்றைத் துல்லியமாகவும், பொதுவானவற்றை விரிந்த நிலையிலும் சிந்திக்கின்ற சமூக அறிவின் இயங்கியல் கலையைப் பெற்றிருக்கினறோமா? ஏனெனில், இந்தக் கலையே தகவலறிவு, துறை சார்ந்த அறிவு, சமூக அறிவு என்ற அறிவின் முப்பரிமாண நிலையை ஆளுமைப்படுத்துகிறது. ஒவவொரு மனிதரின் செயலூக்கம் மிக்க கருத்துநிலைபாட்டிற்கு வழிவகுக்கிறது.

தாய் மொழியில் உணரப்படுகின்ற எல்லாத் தகவல்களும் மீப்பெரும் சமூக அறிவில் செறிக்கபட்டு துறைசார்ந்த அறிவுகளாக உயர்த்தப்படுகின்றன. தாய்மொழியாக உணரப்படாத எத்தகையத் தகவல்களும் சிந்திக்க முடியாதத் தகவல் குவியலாகவும், சிந்தனைக் கலைக்கு பேரிடர் செய்யும் மீப்பெரும் கருத்துச் சுமையாகவும் வினையாற்றும் தன்மையுடையவை. அதாவது, ஆத்மார்த்தமான கலை என்ற நிலையிலிருந்து சிந்தனை முறையை அர்த்தமற்ற பெருஞ்சுமை என்ற நிலைக்கு வீழ்த்துபவை.

உணர்வுப்பூர்வமான அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே பழுதின்றி சிந்திக்கும் சுயத்திறம் உள்ளவர்களாக திகழ முடியும். அதனால்தான் தாய்மொழி வழியில் குழந்தைகளுக்கு கல்வி என்ற அறிவியல் பூர்வமான நடைமுறை உலகம் முழுதும் கடைபிடிக்கப்படுகினறது. ஆனால், நாம் கடைபிடிக்கின்றோமா? குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியில் கல்வி வழங்காவிட்டால் அது குழந்தைகள் மீது சமூகம் நிகழ்த்துகின்ற பெருங்குற்றம். தாய்மொழி அல்லாத பிற மொழியில் கல்வி வழங்குவது அவர்களின் கற்றல் திறனையும் சிந்திக்கும் கலையையும் சிதைக்கின்ற குற்றச் செயலாகும்.

மேலும் இந் நடவடிக்கை குழந்தைகள் மீது தொடுக்கப்படுகின்ற அறிவு வன்முறையாகும். அறிவு வன்முறைக்கு பலியாகும் குழந்தைகள் ஆத்மார்த்தமான சிந்தனை கலையை இழந்தவர்களாகவும், திறன் குன்றியவர்களாகவும் வளர்கிறார்கள்.

சமூகத்தில் மேன்மையான மனிதவளமாக உயர்த்த முடியாதபடி சமூக அறிவின்மையின் அதலபாதாலத்தில் வீழ்த்தப்படுகிறார்கள்.

தமிழால் உணர்வு பெற்ற நம் குழந்தைகளை இத்தகைய அவல நிலைக்கு தள்ளிவிடுவது குப்பைத் தொட்டியில் குழந்தையை வீசிஎறிந்த தாய்க்கு ஒப்பாகும். தமிழ் வழியில் கல்வி பயில்வதை இழிவாகவும் சாத்தியமற்றதாகவும் கருதும் நிலை இருக்கின்றது. இந்த மனநிலையை நம்மிடம் ஏற்படுத்தும் அளவிற்கு ஆட்சியாளர்களை நாம் விட்டுவைத்தோம் என்பது கேடு.

தாய் வயிற்றில் ஐந்து மாத குழந்தையாக உருப்பெற்றதிலிருந்து தமிழ் மொழியில் உணர்வேற்றப்பட்டு வளர்கிறது குழந்தை. தன் நரம்பு மண்டலமெங்கும் உணர்வேற்றப்பட்ட தமிழ் மொழியிலேயே குழந்தையின் புரிதலும் பேச்சும் இயற்கையாக நிகழ்கின்றது. எனவே, நம் குழந்தைகள் இயற்கையாகப் புரிந்துகொண்டு பேசுகின்ற தாய்மொழியாகிய தமிழ் மொழியை எழுதுவதற்கும் படிப்பதற்கும் கற்பதே மகிழ்ச்சியான அறிவியல் வழிப்பட்ட ஆரம்பக்கல்வியாக அமையும். இந்த மகிழ்ச்சியே உயர்கல்வியான ஆராய்ச்சி கல்விவரை குழந்தைகள் உயர்வதற்கு வழிவகுக்கும். தாய் மொழி வழியில் குழந்தைகள் பெறுகின்ற அறிவு முதிர்ச்சியே தான் விரும்புகின்ற பிறமொழிகளின் அறிவு நிலைகளைக் கற்பதற்கும் வழிவகுக்கும். ஒரு குழந்தை தாய்மொழியின் வழியாக கற்று மகிழ்ந்தால் மட்டுமே எந்தத் துறைகளிலும் எந்த மொழிகளிலும் ஆளுமையுடன் தன்னை நிஷரூபிக்க முடியும். இத்தகைய நிஷரூபணத்தைப் பெறுவதற்கு தாய்மொழியில் கற்று மகிழ்வதே அடிப்படை. தாய்மொழியில் கற்று மகிழ்ந்த குழந்தைகள் மட்டுமே விருப்பமொழியாக எத்தனை மொழியையும் உரிய முறையில் குறுகிய கால பயிற்சிகள் மூலமாக பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ள முடியும்.

தனது அறிவுத் தொடர்ச்சிக்கு உதவாத பிறமொழி கல்வியால் அதாவது, தாய்மொழி அல்லாத ஆரம்பக் கல்வியால் இயற்கையாக ஊற்றெடுக்கின்ற கற்றல் திறனும் மகிழ்ச்சியும் சிதைக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு அவர்களது மொழியை எழுதவும் படிக்கவும் சிந்திக்கவும் வாய்ப்பின்றி உரிமையிழந்த அகதியாக முடங்கிப் போகிறார்கள். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான கற்றல் நடைமுறையை வழங்காமல் பெற்றோர்கள் கடமை தவறுகிறார்கள்.

கற்றல் நடவடிக்கையில் மகிழ்ச்சி இல்லாவிட்டால் மனதில் சுதந்திரம் இருக்காது. சுதந்திரம் இல்லாவிட்டால் அறிவு அழுத்தமாகிவிடும். அழுத்தமான மனதில் நெகிழ்ச்சி இருக்காது. கற்பனை சுரக்காது. உணர்விற்கும் அறிவிற்கும் செயலுக்கும் உறவிருக்கும் இருக்கக்கூடாத மீப்பெரும் இடைவெளி இயல்பாகிவிடும். தாய்மொழி வழியிலான கற்றல் செயல்பாட்டில் நிகழ வேண்டிய கற்றல், சிந்தித்தல், செயல்படுதல் மேம்பட்டநிலையில் மேலும் கற்றல், சிந்தித்தல், செயல்படுதல் என்ற சுழல்வட்ட ஏற்ற நிகழ்வானது முற்றிலும் சிதைவடைகின்றது. மாறாக, அயல் மொழி வழியிலான கற்றல் செயல்பாட்டில் கற்றலாவது நினைவில் மறவாதிருத்தல், ஒப்புவித்தல், எழுதிமுடித்தல் என்ற தேக்கநிலைக்கு குழந்தைகளை ஆட்படுத்துகிறது. இந்த நடைமுறையால் குழந்தைகள் மனித நிலைக்கு உயராமல் மந்தைநிலைக்கு வீழ்த்தப்படுகிறார்கள்.

குழந்தைகளின் எதிர்காலம் குறித்த மரியாதையும், நல்லுலகம் குறித்த தியாக உணர்வும் பெற்றோர்களிடம் இருந்தால் குழந்தைகளை வீழ்த்துவார்களா? குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்று தன் தோளில் உயர்த்தி கொண்டாடுகின்ற சமூகத்தால் இத்தகைய துரோகத்தை செய்ய இயலுமா? எனவே, குழந்தைகளின் தாய்மொழி வழியிலான கல்வி உரிமைகளை பாதுகாத்து வழங்குவது மனிதகுல சமூகத்தின் தவிர்க்கக்கூடாத கடமையாகும்

தாய்மொழி வழிக் கல்வியில் உரிய முறையில் படித்தல், புதுமைகளைப் படைத்தல், உண்மைகளைக் கண்டுபிடித்தல் என்பதாக சிந்தனைப்பூர்வமான கற்றல் நடவடிக்கை நிகழ்கின்றது. அதனால்தான் தாய்மொழி வழிக் கல்வியானது நடைமுறையிலிருந்த காலம்வரை தமிழ்நாட்டில் தலைசிறந்த அறிஞர்களும் தலைவர்களும் அதிகாரிகளும் கண்டுபிடிப்பாளர்களும் உலகம் அறியும்படி உயர்ந்திருந்தார்கள். ஒரு சோறு பதமெனில் நிலவு மனிதன் மயில்சாமி அண்ணாத்துரை. ஆனால், தேக்கநிலைக்கு ஆட்படுத்தும் தாய்மொழிவழியற்ற கல்வியானது சிந்திக்க இயலாத மந்த புத்தியுடைய தலைமுறைகளை உருவாக்கிவிட்டது.

அதனால்தான் தாய்மொழிவழிக் கல்வி அறுந்து போன காலத்தில் அயல்மொழி வழிக்கல்வியால் ஆளுமையுள்ள மனிதர்களை நம்நாடு பெற்றெடுக்க இயலவில்லை.

எனவே, மனிதர்களாக உயர்த்தப்பட வேண்டிய நம் குழந்தைகளை வெறும் மந்தைகளாக உருமாற்றிய குற்றவாளிகள் நாம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உலகில் ஆங்கிலத்திற்கு அடுத்ததாக கணினியில் அதிகம் பயன்படுத்தப்படும் மொழி தமிழென்று சிகரம் உயர்ந்துள்ள நாம்..



## நாடாளுமன்றத் தேர்தல் 2024



# பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்வது தற்கொலைக்குச் சமமான செயற்பாடு!

## திகாமடுல்ல வேட்பாளர் தவம் தெரிவிப்பு



(எம்.ஏ.றமீஸ், நவ. 08)

எமது இனத்துவ அடையாளத்தைச் சிதைத்து விட்டுப் பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைந்து பயணிப்பது என்பது ஓர் தற்கொலைக்கு சமமாகும் என திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஏ.எல். தவம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், "தற்கால சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றத்தின் மூலம் எல்லாவற்றையும் அழித்து விட்டு எங்களை இன்னுமொரு பரப்பிற்குள் கரைத்து விடுகின்ற அரசியலை நாம் முன்கொண்டு செல்ல முடியாது.

இப்போதிருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகள் நாளை மாறலாம். அல்லது இப்போதிருக்கின்ற அரச தலைமைகள் மாற்றம் பெற முடியும், அல்லது நீண்ட காலத்திற்கு ஆட்சியாளர்களால் நிலைத்திருக்க முடியாமல் போய்விடும் என்கின்ற ஓர் சூழ்நிலை ஏற்படுகின்றபோது எமது தனித்துவத்தையும் எமது இனத்துவ அடையாளத்தையும் சிதைத்து விட்டு எம்மை முற்றாக அழித்துவிட்டு நாம் பெரும்பான்மைக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது ஓர் தற்கொலைக்கு சமனான விடயமாகும்.

இலங்கையில் தற்போது பத்து சதவீதமாக காணப்படும் முஸ்லிம் சமூகத்திற்கு தொடர்சியாக கிடைத்து வருகின்ற சுமார் இருபது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினை இழக்கின்ற அபாய நிலை தற்போது காணப்படுகின்றது. ஆகையால் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது மக்கள் தமது உரிமைகளையும் இனத்துவ அடையாளங்களையும் நன்கு சிந்தித்து அவற்றை பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 95 ஆயிரம் வாக்குகளைப் பெறுமாக இருந்தால் எமது கட்சியின் மூலம் இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான முழு முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்" என்றார்.

(ஐ-55)

# 3,000 இற்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திரங்கள் இரத்து

*கொழும்பு, நவ.08*

*இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 3,000 இற்கும் மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் நீதிமன்றங்களால் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் 3,249 சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.*




*சாரதிகள் செய்த பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன்றங்களால் முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளுக்கு அமைவாக, குறித்த சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுவதற்கு கவனக்குறைவாக வாகனங்களை செலுத்துவதும், வாகனங்கள் சரியான தரத்தில் இல்லாததுமே பிரதான காரணம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் பேராசிரியர் மொஹமட் மஹீஷ் தெரிவித்துள்ளார்.*

*எனவே, வாகனத்தை இயக்குவதற்கு முன்னர் அதன் தரத்தை பரிசோதிப்பது இன்றியமையாதது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் வீதி அமைப்பில் காணப்படும் குறைபாடுகளும் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதாக பேராசிரியர் மொஹமட் மஹீஷ் மேலும் குறிப்பிட்டார் .*

*(ஐ)*






# கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து விபத்து பலர் காயம்



*கொழும்பு, நவ. 08*

*மடகல்ல – மஹவ வீதியில் கொன˙வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*விபத்தின் போது பேருந்தில் 15 பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*காயமடைந்தவர்கள் சிகிச்சைக் காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

*(ஐ)*






# பாடசாலை விடுமுறை தொடர்பில் கல்வி அமைச்சின் விசேட அறிவிப்பு



கொழும்பு, நவ. 08

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு 13ஆம் திகதி புதன்கிழமை முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வாக்கெடுப்பு மையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் 12 ஆம் திகதி பாடசாலை நிறைவடைந்ததும் தேர்தல் பணிக்காக அந்தந்த கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்துப் பாடசாலைகளுக்கும் 13ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் 18 ஆம் திகதி திறக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)



# முன்னாள் அமைச்சர் லொஹான் பயன்படுத்திய கார் நீதிமன்றில்



கொழும்பு, நவ. 08

சட்டவிரோதமான முறையில் கார் ஒன்றை பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த மற்றும் அவரது மனைவி நுகேகொட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, லொஹான் ரத்வத்த தனது முதல் மனைவிக்கு சொந்தமான வாகனத்தின் இலக்கத் தகடு மற்றும் ஊாயளளளை இலக்கத்தை பயன்படுத்தி பல சந்தர்ப்பங்களில் குறித்த காரை பயன்படுத்தியுள்ளதாக இன்றையதினம் (07-11-2024) நீதிமன்றத்தில் தெரியவந்துள்ளது.

பொலிஸ் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ருவன் குணசேகர, பொலிஸார் சார்பில் சாட்சியமளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதனையடுத்து, குறித்த இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நுகேகொட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தற்கொலை செய்து கொண்ட லொஹான் ரத்வத்தவின் தனிப்பட்ட செயலாளரே குறித்த காரைக் கொண்டு வந்ததாக சந்தேக நபர்கள் கூறுவது உண்மைக்கு புறம்பானது என பொலிஸ் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் 2வது மனைவியான சஷி பிரபா ரத்வத்தவின் மிரிஹான வீட்டில் குறித்த கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி சந்தேக நபர்கள் இருவருக்கு மாத்திரம் உள்ளே செல்லக்கூடிய தானியங்கி வாயில்களைக் கொண்டதாக குறித்த வீடு காணப்படுவதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். சந்தேகநபர் கடந்த 17.10.2021 திகதி குறித்த Toyota Lexus காரில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்றுள்ளதாகவும், அது தொடர்பான காணொளி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்களின் பிணை கோரிக்கையை நிராகரித்த நீதவான், சந்தேக நபர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரது வங்கிக் கணக்குகளையும் பரிசோதிக்கவும், நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட காணொளி ஆதாரத்தை அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பிவைக்கவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)







## வெற்றிடங்களாக உள்ள அரச நிர்வாக சேவைகளின் பதவி



கொழும்பு, நவ. 08

நாட்டில் உள்ள பொது நிர்வாக சேவை உட்பட பல்வேறு அரச நிர்வாக சேவைகளில்வெற்றிடங்கள் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, 1200க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்கியல் சேவை ஆகியவற்றில் அதிக எண்ணிக்கையிலான காலியிடங்கள் உள்ளன, மொத்தம் 600 பணியிடங்கள் உள்ளன. இந்தப் பணியிடங்களுக்கான தேர்வுகள் ஏற்கனவே நடத்தப்பட்டுவிட்டன, முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு தொடரும். கூடுதலாக, பொறியியல் சேவையில் 250 க்கும் மேற்பட்ட காலியிடங்கள் உள்ளன, அதே நேரத்தில் திட்டமிடல் சேவை மற்றும் அறிவியல் சேவைகள் ஒவ்வொன்றும் 100 காலியிடங்களைக் கொண்டுள்ளன. (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.11.2024 இல் வெளியிடப்பெற்றது.